# திராவிடக் கூட்டரசு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவரும் வாரஇதழ். கரந்தை, தஞ்சை.

ஆசிரியர்: சி. இலக்குவனார், எம். ஏ., எம். ஓ. எல்.

மலர் 1 | 31-10-52 | இதழ் 7


MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

### ஸ்ரீபிரகாசரின் பிதற்றலும் பெண்கள் உளக் குமுறலும்

## "உங்கள் தீர்ப்பு என்ன?

சென்னை கவர்னர் திரு. ஸ்ரீபிரகாசா, சென்னை நகராட்சிப்பெருமன்ற விளையாடுமிடத்தில் (Corporation Stadium) புதிய மண்டபத்தைத் திறந்துவைக்கையில், "ஆடவர்கள் வெறித்துப் பார்ப்பதை ஆட்சேபிக்கும் ஒரு ஸ்திரீயைக் கூட நான் இதுவரை சந்திக்கவில்லை" என்று கூறினார். பந்தயம் பார்க்கவும், பதக்கங்கள் வழங்கவும், கட்டிடத்திறப்பு விழாக்களில் கலந்து கொள்வதற்கும், அடிப்படைக் கல் நாட்டவும் தவறாது சென்று வருவதுதான் கவர்னர் அவர்களுக்குரிய கடமையா? பட்டத்துக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு, உல்லாச புரியிலே உலவும் நேரத்தில், தமிழ் நாட்டுப் பெண்களின் தன்மான உணர்ச்சியை மறந்தா, அவர் இவ்வாறு உளறினார்? கற்பை உயிரென ஓம்பும் வேறெந்த நாட்டிலுமில்லாத நம் தமிழ் பண்பாட்டை அவர் அறிந்திலர்போலும்! வேற்று ஆடவர் வெறித்துப் பார்ப்பதை வட நாட்டுப் பெண்கள் சிலர் ஒருவேளை விரும்பி வரவேற்கலாம். ஆனால், தம் தலைவனை யன்றிப் பிறரை ஏறெடுத்தும் நோக்கியறியாத பெண்கள் இன்றும் எண்ணிறந்தவர் இருக்கின்றனர் என்பதை திரு. ஸ்ரீபிரகாசா உணராதது விந்தைதான். அவரது அறுபத்திரண்டு வயது அனுபவத்தில், உலகிலுள்ள எல்லாப் பெண்களின் உள்ள நிலையையும் தாம் ஆராய்ந்து அறிந்து கொண்டிருப்பதாக அவர் எண்ணிக் கொண்டிருக்கின்றார். "தங்களுக்கு அக்கறையுள்ள பெண்களை வேறு ஆடவர்கள் வெறித்துப்பார்ப்பதை ஆண்கள் தான் அனுமதிப்பதில்லை" என்று அவர் குறிப்பிட்டார். அதே போல் தங்களிடம் அக்கறை காட்ட வேண்டியவரன்றி, அந்நிய ஆடவர்கள் தங்களை வெறித்துப் பார்ப்பதை அறிவையரும் அறவே வெறுக்கின்றனர் என்பதையும், அவர் ஏனோ சிந்திக்கத் தவறி விட்டார்!

ஆரியப் பரம்பரையில் வளர்ந்து, ஆரியச் சூழலிலேயே பழகிப் பழுத்துப் போயிருக்கும் திரு. ஸ்ரீபிரகாசா அவர்களது குண இயல்புகளைத் தானே பறைசாற்றுவார்? அதற்காக அவர் இந்திய நாட்டு எல்லாப் பெண்களையுமே ஏன் இழிவு படுத்த வேண்டும்?

தனி இதழ் விலை அணா 1 ★ ஆண்டுக்கட்டணம் ரூபாய் 4

# பெண் குலத்திற்கே இழிவு

சென்னை கவர்னர் திரு ஸ்ரீ பிரகாசா கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தின் புதுமண்டபத் திறப்பு விழாவின்போது பேசிய பேச்சு எங்கள் பெண்குலத்தையே கொதித்தெழும்படி செய்திருக்கிறது. அவர் பெண்களை பொம்மைகள் என நினைத்துப் பேசினாரா? பெண்ணினத்தை இழிவு படுத்தும் அவர், பெண்வயிற்றில் பிறக்காமல் பெண்ணோடு வாழ்க்கை நடத்தாமல் பெண்ணைப் பெறாமல் இருந்தவரா? என் 62வயது வாழ்வில் ஆடவர் வெறித்துப் பார்ப்பதை வெறுக்கும் ஒரு ஸ்திரீயைக் கூட நான் கண்டதில்லை ஆண்கள் தங்களுக்கு அக்கறையுள்ள பெண்களை வேறு ஆடவர்கள் வெறித்துப் பார்ப்பதை விரும்புவதில்லை ஆகையால் அவர்களுக்குப்பயந்து கொண்டுதான் பெண்கள் இருக்கிறார்களேயொழிய தாங்கள் மற்ற ஆடவரின் வெறித்த பார்வைக்கு உள்ளாவதை அவர்கள் வெறுப்பதில்லை'? என்றார் அவர். ஔவை, கண்ணகி, பொன்முடிபோன்ற வீரப்பெண்கள் வாழ்ந்த நாட்டிலா அந்தப் பேச்சு? ஒரு மண்டிலத்தலைவரா இப்படிப் பேசுவது? பெண்குலத்தை இழிவாகப் பேசுவதை பெண்கள் எதிர்த்தே தீருவர். பெண்குலத்தின் சிறப்பை, கற்பு நிலையை இவர் கண்டாரா என்ன? ஒரு சில தவறிய பெண்களுக்காக, அவர்களைத் தவறச்செய்த ஆடவர்களைக் குறை சொல்லாது, பெண் குலத்தையே அல்லவா துடிக்கச் செய்கிறார்? இந்தப் பேச்சைக்கேட்டு அங்கு கூடியிருந்த ஆடவர்கள் சிரித்தனராமே? வெட்கக்கேடு! அவர்களுக்கும் பெண்குலத்திற்கும் தொடர்பே இல்லையா? தெய்வப்பிறவிகளோ அல்லது வாயில்லாப் பூச்சிகளோ? அவர்களில் ஒருவராவது தன் மனைவியைப் பற்றி நினைக்கவில்லையா? மானிட வர்க்கமே பெண் குலத்தைப் பழியாதே! பெண்ணினம் முன்னேற இது தானா வழி?

சரி. இனி பெண் குலம் எல்லா ஆடவரையும் ஒரு படியில் வைக்கும். கணவனுக்கும் மாற்றானுக்கும் வித்தியாசமில்லை என்று ஆரம்பிக்கிறோம். இது உங்களுக்குச் சம்மதமா? ஆண்கள் தாம் அரணாம்; அவர்கள் இல்லாவிடில் பெண்கள் தவறுவார்களாம்! அரணைத் தாவி மேலே பறக்கும் வானவூர்தி இல்லையா? பெண்களின் மனநிலையையறியாது, முதிர் வயதில் தன் வாய்க்கு வந்ததை உளறிக்கொட்டும் நம் கவர்னரின் நிலைத் தடுமாற்றப் பேச்சைக் கண்டு பெண் இனம் மிகவும் வருந்துகிறது.

—வெற்றித்திரு

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆராயும் திறனற்ற அவரது இந்த மொழிகளை அங்கிருந்த அத்தனை பேரும் விகடமென்று கருதினர் போலும்! அவ்வளவு பெரிய கூட்டத்தில், அவர் கூற்றை மறுத்து உண்மையை விளக்கிப் பெண்ணினத்தின் பெருமையை நிலைநாட்ட, ஒரு தமிழன், தமிழச்சிகூட அங்கில்லை! எத்தனை வருந்தத்தக்க செய்தி இது? அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற உயரிய குணங்களை உயிர்நாடியாகக் கொண்டிருந்த தமிழ் உதரத்தில் ஊறி உருவான பெண்களும், அவர் இங்ஙனம் உளறியதைக் கேட்டுச் சிரித்தனராம்! ஆம், அதனைக் கேட்டு நாமும் சிரிக்கின்றோம்! பண்டைத்தமிழ் மரபுக்கே தலைக்குனிவை ஏற்படுத்திவிட்ட அவர்களது தகாத செயலைக்கண்டு வயிறெரிந்துதான் சிரிக்கிறோம்!

இனிமேலாவது, விகடம் என்றெண்ணி அறிவற்ற இந்த வீண் மொழிகளை திரு ஸ்ரீ பிரகாசா விளம்பாமலிருக்கட்டும்! வயது முதிர்ச்சியின் காரணமாக அறிவு நிலை தடுமாறி அவர் இப்படி உளறினாலும், அதனைக்கேட்டுத் தம் தன்மானத்தையும் மறந்து, அங்கு கூடியிருப்பவர்கள் இருக்கவேண்டாம். அதற்குமாறாக ஆரியப் பண்பாட்டிலே ஊறித்திளைத்து, அவர்கள் குண இயல்புகளைக் கூறும் திரு ஸ்ரீ பிரகாசாவுக்கு மற்ற பெண்களின் உயர்ந்த பண்பாட்டுக்களை எடுத்தோதி அவரைத் திருத்துவதுதான் அவர்கள் கடமை. உங்கள் தீர்ப்பென்ன?

.... ஒளிமதி ....

க. இறைமாட்சி சென்ற இதழின் தொடர்ச்சி

# வள்ளுவர் கூறிய அரசியல் முறைமை

௨. அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் [இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.

சொற்பொருள்: அஞ்சாமை=மனம் தளராமை, ஈகை=கொடை, அறிவு=இயற்கையறிவும் நூலறிவும், ஊக்கம்=மன எழுச்சி, இந்நான்கும், எஞ்சாமை=குறையாமலிருத்தல், வேந்தற்கு இயல்பு=அரசனுக்கு இயல்பாகும்.

விளக்கம்: இந்நான்கும் நாட்டையாளும் மக்கள் தலைவர்க்கும் இன்றியமையாதன. ஆட்சியில் அவ்வப்போது சேரும் சிக்கல்களைக் கண்டு அஞ்சாது தம் பணியில் மேற்செல்லுதல் வேண்டும். ஈகை ஒன்றால்தான் ஏனையோரைத் தம்பால் பிணிக்க முடியும். கட்சித்தலைவர்கட்கு இன்றியமையாது வேண்டப்படுவது ஒன்று. தொண்டர்கட்கு மனமுவந்து வரையாது ஈதல் வேண்டும். இயல்பாகத் தமக்கு வாய்க்கப் பெற்றுள்ள அறிவுடன் (உலகியலறிவு) நூலறிவும் வேண்டும்.

௩. தூங்காமை கல்வி துணிவுடைமை இம் [மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவர்க்கு

சொற்பொருள்: தூங்காமை=காலந்தாழ்வு இல்லாமை, கல்வி=ஆளும் முறையும் அறிவிக்கும் கல்வி, துணிவுடைமை=ஒன்றைத் துணிந்து செய்யும் ஆற்றலுடைமை, இம்மூன்றும், நிலன் ஆள்பவர்க்கு=நாட்டை ஆள்பவருக்கு; நீங்கா—நீங்கமாட்டா.

விளக்கம்: நாட்டை ஆளும் நிலையில் உள்ளவர்க்கு இம்மூன்றும் இன்றியமையாதன. இம்மூன்றும் அற்றவர் நாட்டை ஆளும் நிலைக்குரியவராகார். ஆகவே இவ்வியல்புகள் அவரை விட்டு நீங்கா' என்றார். நீங்கி விட்டால் ஆளும் நிலை அவரை விட்டு நீங்கி விடும்.

௪. அறன் இழுக்காது அல்லவை நீக்கி [மறன் இழுக்கா
மானம் உடையது அரசு

(தொடரும்)

6-ம்பக்கத் தொடர்ச்சி

ஆகவே மொழிவழி நாடுகள் அமைந்து உரிமையோடு மக்களாட்சி நடைபெறுமேல் பிரஞ்சு உடைமைப் பகுதிகளும் இயற்கையாகவே அந்தந்த மொழிப் பகுதிகளுடன் இணைந்து விட வேண்டியது தானே. ஆனால் இப்பொழுது அங்குள்ளோர் சிலர் "நாம் இப்பொழுது பிரஞ்சு ஆட்சிக்குட்பட்டிருப்பதால் பல நன்மைகளைப் பெற்று வருகின்றோம், அவற்றை இழந்து வடவர் ஆட்சிக்கு அடிமைப்படோம். திராவிடக்குடியரசு தோன்றுமேல் அதனுடன் இணைந்து கொள்வோம் அதுவரை நாங்கள் தனித்து இருந்தாலும் இருப்போம் வடவர் ஆட்சிக்கு அடிமைப்பட்டோம்" என்று கூறக் கேட்டுள்ளோம். இக்கூற்றைப் புறக்கணித்து விட முடியாது.

தெலுங்கு நாட்டைப் பெறுவதற்காகப் பொது உடைமைக் கட்சியினர் இனிச் சட்ட மன்றங்களில் தெலுங்கிலேயே பேசுவதாக உறுதி பூண்டுள்ளனராம். சட்ட சபையில் அவரவர் மொழியில் பேச உரிமையுண்டு. தெலுங்கில் பேசுவோம் என்பது அவர்கள் மொழிப்பற்றைக் காட்டுவதற்குத் துணையாகும். ஆனால் மொழிவழி நாடு அமைவதற்குத் துணைபுரியுமா என்பது ஐயமே. பேசுவதைத் தடுக்க முடியாத போது என்றுமே பேசிக் கொண்டிருக்கலாமன்றோ. தெலுங்கு நாடு பிரிவதற்கு எவ்வாறு துணைபுரியும்? ஆதலின் தெலுங்கு நாடு பிரிவதற்கு என்று இல்லாமல் மொழிவழி நாடுகள் அமைய வேண்டுமென்று ஆங்காங்கு எல்லா முற்போக்குக்கட்சியினரும் உடனடிக்கிளர்ச்சிகள் தொடங்குதல் வேண்டும். ஆட்சியாளர் தம் அகக்கண்ணும் புறக்கண்ணும் திறக்கப் பெறுதல் வேண்டும்.

பெரியார் பயிற்சிக் கல்லூரியில்
3—11—52 முதல் 53 மார்ச்சுத் தேர்வுகட்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது.

திராவிடக்கூட்டரசு

மலர் க | 31—10—52 | இதழ் எ

# இந்திய மொழிகளுக்கு தேவநாகரி எழுத்து

இந்தியாவை ஆரிய நாடாகவும் இந்தியப் பண்பாட்டை ஆரியப் பண்பாடாகவும் இந்திய மொழியை ஆரிய மொழியாகவும் ஆக்குவதற்குத்தொன்று தொட்டே முயன்று வருகின்றனர். ஆரியநாடென்றுகூறாதுபோயினும்பாரதநாடுஎன்றுகூடத்தொடங்கி விட்டனர் இந்தியாவில்உயர்ந்தோர்எனப்படுவோர் பண்பாடு ஆரியப் பண்பாடாகவே உள்ளது. இந்துமதமே ஆரிய மதந்தானே. இந்திய அரசு மொழி என்பது இந்தி. ஆரியச் சிதைவுதானே இந்தி. இந்தியை அகற்றிவிட்டு அசல் ஆரியமொழியையே இந்திய மொழியாகக் கொள்ள வேண்டும் என்று முயல்வோரும் உளர்.

வடஇந்திய மொழிகள் எல்லாம் ஆரியமொழிச் சார்புடையனவே. தென்னிந்திய திராவிட மொழிகள் தாம் ஆரியத்தினின்றும் வேறுபட்டுள்ளன. திராவிட மொழிகளுட் சில ஆரிய மொழிச் சொற்களை மிகுதியாகக் கொண்டிருப்பினும், ஆரியமொழி வழிப்பட்டன ஆகா இலக்கண அமைதியும் சொற்கோப்பும் திராவிட மொழி வழிப்பட்டனவே. திராவிடத்தாயாம் தமிழ், ஆரியத்தை அறவே வெறுப்பது.

இனி எல்லா மொழிகளும் தேவநாகரி எழுத்தால் எழுதப்பட வேண்டுமென்ற முழக்கம் வெற்றி பெறுமேல், திராவிட மொழிகளும் தேவநாகரி எழுத்தால் எழுதப்படுமேல், திராவிட மொழிகள் விரைவில் அழிந்துவிடும். மொழிகளுக்கெல்லாம் ஒரே எழுத்தாய் இருந்தால் எல்லா மொழிகளையும் விரைவில் கற்றுக்கொள்ளலாம் என்கின்றனர்.

இக்கூற்று உண்மைக்கு மாறானது. மேல்நாட்டு மொழிகளுள் பல உரோமன் எழுத்தால் எழுதப்படுகின்றன. ஆனால் ஒரு மொழியை அறிந்தோர் இன்னொரு மொழியை எளிதில் கற்க முடியவில்லையே. ஆங்கிலம் கற்ற ஒருவர் பிரஞ்சு மொழியையோ, செர்மன் மொழியையோ புதுமொழியாகவே கற்கவேண்டியுள்ளது. இந்தி மொழி கற்ற ஒருவர் தேவநாகரியில் எழுதப்படும் பிறிதொரு மொழியை எளிதில் கற்க முடியவில்லையே. ஆதலின் மொழிகட்கெல்லாம் ஒரே எழுத்தானால் விரைவில் கற்கலாம் என்பது எள்ளளவும் பொருந்தாது. அன்றியும் ஒருவர்க்கு பல மொழிகள் தெரிந்திருக்க வேண்டுமென்ற கட்டாயம்என்ன? அவரவர் மொழியிலேயே நாட்டாட்சி நடைபெறுமானால் கல்வி கற்பிக்கப்படுமானால், அவரவர் மொழியும், உலகப் பொதுமொழியொன்றும் கற்றால் போதுமே. ஆகலின் பல மொழிகளை எளிதில் கற்கலாம் என்ற கூற்றை அடிப்படையாக வைத்து எல்லா மொழிகளையும் தேவநாகரி எழுத்தால் எழுத வேண்டுமென்று கூறுவதை எதிர்க்கவேண்டும். திராவிட மொழிகள் தேவநாகரியில் எழுதப்படுமேல் திராவிட மொழிகள் மறைந்து விடுவது உறுதி. திராவிட மொழியில் ஆரியச் சொற்கள் கலந்தே பல மொழிகளாக ஆக்கிவிட்டது. இனியெழுத்தும் தேவநாகரி எழுத்தாக அமையுமேல் திராவிட மொழிகள் செத்தொழிந்துவிடும். செத்துப்போன ஆரியம் உயிர்பெற்றுவிடும் ஆகலின் திராவிடர்களே எல்லா மொழிகளையும் தேவநாகரி எழுத்தால் எழுதவேண்டுமென்ற கிளர்ச்சியை முளையிலேயேகிள்ளி எறியுங்கள்

பட்டுக்கோட்டைத் தாலுக்காவுக்கு

**இரா. இளவரி**

அவர்களைப் பட்டுக்கோட்டைத் தாலுக்காவுக்குதிராவிடக்கூட்டரசு விற்பனைப் பொறுப்பாளராகவும்,உறுப்பினர் சேர்ப்போராகவும் விளம்பரம் பெறுவோராகவும் நியமித்துள்ளோம்..... ஆசிரியர்

# மொழி வழி நாடுகள் முன்னின்று அமைப்போம்

மொழி, கலை, பண்பு, நாகரிகம் தொன்று தொட்டு வரும் மரபு இவைகளை அடிப்படையாகக் கொண்டே ஒரு தேசிய இனம் உருவாகும். ஒரு இனத்தின் தொன்று தொட்டு வரும் மரபு தொடர்பற்றுப் போகலாம். ஒரு இனம் தன் கலை, பண்பு, நாகரிகம் இவற்றை விட்டொழித்து பிற இனத்தின் கலை, பண்பு, நாகரிகம் இவற்றை மேற்கொள்ளலாம். ஆனால் ஓரினம் தன் மொழியை விடுத்து வேறொரு இனத்தின் மொழியை முழுவதும் மேற்கொண்டு விடுவதென்பது அவ்வளவு எளிதில் முடியக் கூடியதன்று. எடுத்துக் காட்டாக திராவிட இனத்தையே எடுத்துக் கொள்வோம். திராவிட இனத்தின் முக்காற் பகுதியினர் ஆரியக்கலை, பண்பு நாகரிகம் முதலியவற்றை மேற்கொண்டனர். மொழியில் ஆரியச் சொற்கள் வந்து புகுந்தன. சில வட்டாரத் திராவிடர்கள் ஆரிய மொழியை ஒட்டியே இலக்கணமும் அமைத்துக் கொண்டனர். ஆயினும் திராவிட மொழிகள் ஆரிய மொழியாகி விடவில்லை. ஆகவே ஒரு தேசிய இனத்திற்கு மொழியே முதன்மையானது. மொழி யென்பது எண்ணங்களை அறிவிக்கும் கருவிதான். மக்களால் நாளடைவில் படைத்துக்கொள்ளப்பட்டதுதான். வேறு எவற்றையும் அடிக்கடி மாற்றிக் கொள்ள முடியும்; மொழியை மட்டும் அடிக்கடி மாற்றிக்கொள்ளல் இயலாது. அதனாலேயே ஒரு மொழி பேசுவோர் பலதிறப்பட்ட மதத்தினராயும் பண்பாட்டினராயும் இருக்கின்றனர். மொழி அழியுமேல் அவ்வினமே அழிந்தது போலத்தான்.

ஆகவே மொழி வழியில் மக்கள் கூட்டம் அமைந்து அக்கூட்டம் வாழுமிடம் தனி வட்டாரம் ஆகிப் பின்னர் தனி நாடாக உருப்பெற்று அந்த நாட்டுக்கு ஒரு ஆட்சியும் அமையப்பெறுதல் இயல்பு. ஆங்கிலேயர்வருகையால் மொழிவழியமையப்பெற்றிருந்த நாடுகள் சிதைக்கப்பட்டன. அவர்கள் ஆட்சி வசதிக்கென மாகாணங்கள் வகுத்தனர். நாட்டு மொழிகளைத் தள்ளிவிட்டு அவர்கள் மொழியை ஆட்சிமொழியாக்கினர். அடிமை வாழ்வில் அகப்பட்ட மக்கள் இயற்கைக்குமாறாக ஆட்சிமண்டலங்கள் அமைந்தன்மையையும் வேற்று மொழி ஆட்சிமொழியாக அமைந்திருப்பதையும் வெறுக்கவில்லை. பின்னர் உரிமை வேட்கை தோன்றிற்று; மொழி அடிமை நீங்க வேண்டும் என்று எண்ணினர். அந்தந்த நாட்டு மொழியே அந்தந்த ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்ற கிளர்ச்சிகள் தொடங்கின. ஆங்கில ஆட்சியே தடையாக இருப்பதாகக் கருதப்பட்டது. ஆனால் ஆங்கில ஆட்சி இன்று இல்லை. அன்று மொழி வழியாக மண்டலங்கள் அமைய வேண்டும் என்றவர்கள் இன்று வேண்டாம் என்கின்றனர். பொருளாதாரம் சீர்குலையும்; ஆட்சி முறையில் அல்லல் நேரும் என்கின்றனர். அவர்கள் கூற்று உண்மைப்போக்கிற்கும், வரலாற்று முறைக்கும், மாறானதாகும். அப்படியிருந்தும், மொழி வழிநாடுகள் அமைவதைத் தடுப்பது ஏன்? ஒவ்வொரு கூட்டம் ஒவ்வொரு நோக்கத்தை அடிப்படையாக வைத்துக் கூறுகின்றது. ஆரிய மொழியினம், இந்தியா முழுவதையும் ஆரியஸ்தானாக்கி வழக்கொழிந்த ஆரியத்தை (சமஸ்கிருதத்தை)த் தலைமை மொழியாகவும் ஆட்சிமொழியாகவும் கலைவிளக்கமொழியாகவும் ஆக்கக் கனவு காண்கிறது. அதற்கென மொழிவழங்குமிடமும் இன்றில்லை. ஆதலின் மொழிவழிநாடு பிரிவதை எதிர்க்கின்றனர் ஆரியர். இந்திமொழியாளர், இந்தியே இந்நாட்டின் ஆட்சிமொழி, அரசியல் மொழி, தேசிய மொழி எனப் பறைசாற்றிக்கொண்டிருப்பதால், இந்திமொழித் தலைமைக்கு மொழிவழி நாடுகள் பெருந்தடையாகும் என்று கருதி மொழிவழிநாடு கேட்பது குறுகிய நோக்கம்; மாகாணப்பற்று என இழித்துரைக்கின்றனர், வடநாட்டார், மொழிவழிநாடுகள் அமைந்துவிட்டால் வடநாட்டுத் தலைமைக்குக் கேடு வந்து விடுமே என அஞ்சி மொழிவழி நாடுகள் அமையாதவாறு இடர் விளைத்து வருகின்றனர்,

யார் என்னகூறினாலும் மக்களாட்சி சிறக்க வேண்டுமானால், மக்கள்

MADRAS-1



மொழியிலேயே ஆட்சி நடைபெறவேண்டும். மக்கள் மொழியிலே ஆட்சி நடைபெறவேண்டுமானால் மொழி வழியாக நாடுகள் அமைந்தே தீர வேண்டும்.

மொழிவழியாக நாடுகள் அமைய வேண்டுமென்று கூறுகின்றோம். மாகாணங்கள் அல்ல. இன்று சிலர் மொழிவழியாக மாகாணங்கள் அமைந்து டில்லி ஆட்சியின் அடிமை யுறுப்பாய் இயங்க வேண்டுமென்று முயல்கின்றனர். ஆந்திரப் பிரிவினைக் கிளர்ச்சிக்காரர்கள் கூட ஆந்திர மாகாணம் தான் வேண்டுமென்றும் டில்லித் தலைமைக்குக்கட்டுப் பட்டுக்கிடப்போம் என்றும் தான் கூறி வருகின்றார்கள். அதை நாம் வெறுக்கின்றோம். தனி உரிமையுள்ள மொழி வழி நாடுகள் அமைய வேண்டும் என்று தான் நாம்கூறுகின்றோம். எங்கேயோ உள்ள டில்லிக்கும் நமக்கும் தொடர்பு எதற்காக?

மொழிவழி நாடுகள் என்னும்போது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்னும் மொழிகள் வழியும் நாடுகள் அமையும். இவை நான்கும் இன்று பெயர்களால் வேறுபட்டிருப்பினும் சொற்களாலும், தொடர் அமைப்பாலும் ஒரே மொழிதான். ஆரியத்தின் அடிமைப்பட்டதெலுங்கரும் பிறரும் இன்று ஒப்புக் கொள்ளாது போயினும் பிறகு ஒரு நாள் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். ஆதலின் இன்று மொழி வழங்கும் முறைகளிலேயே நாடுகளைப் பிரித்தால் நமக்கு ஒன்றும் கேடில்லை. தெலுங்கர் திராவிட இனத்தவரேயாயினும் தம்மைத் திராவிடர் என்று ஒப்பு கொண்டு திராவிட நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சிக்கு ஒப்புக்கொள்ளாத வரை அவர்கள் பேராசைக்கிணங்க இயலாது. சென்னை தெலுங்கு நாட்டுக்குரியதை திராவிட நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சிக்காரர்களும் எதிர்த்துத் தான் ஆக வேண்டும். சென்னை முதலமைச்சர் 68% தமிழர் வாழும் பகுதியை 16%. தெலுங்கர்கட்குக் கொடுக்க முடியாது என்று கூறியதைப்போற்றுகின்றோம். பொது உடைமைக் கட்சியினரும் ஆதி முதலே சென்னை தமிழருக்கே யுரியது எனக் கூறிவருகின்றனர். ஆனால் திருப்பதிப் பகுதியைத் தெலுங்கு நாட்டோடு சேர்க்க வேண்டுமென்கின்றனர். பல நெடுங்காலமாக திருவேங்கட மலை தமிழகத்தின் வடஎல்லையாக அமைந்து வந்துள்ளது. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்று தொல்காப்பியப்பாயிரம் கூறுகின்றது. இன்னும் பல சான்றுகள் உள. எல்லைப் புறமாயிருப்பதனால் தெலுங்கர்கள் வந்து குடியேறியிருக்கலாம் தெலுங்கர் ஆட்சிக்குள் எல்லைப் பகுதிகள்சென்றதை தமிழரசுகள் பாராமுகமாக விட்டிருக்கலாம். தமிழர்களும் தெலுங்கை [கொடுந்தமிழை]ப் பேசிவந்திருக்கலாம். ஊர்ப்பெயர்கள் ஆற்றுப்பெயர்கள் மலைப் பெயர்கள் எல்லாம் நல்ல தமிழே. ஆதலின் தமிழகப்பகுதிவடவேங்கடம்வரை என்று தான் வரையறுக்கப் படல்வேண்டும். பொதுவுடைமைக்கட்சியினர் முடிவைத் தீர்ப்புக்கூறுவதுபோல் சென்னை தமிழருக்கே, திருப்பதி தெலுங்கர்க்கே என்பது உண்மைக்குப் புறம்பானது.

பரதகண்ட முழுவதும் மொழி வழி நாடுகள் பிரிக்கப்பட்டு அவைகள் விருப்பப்படி கூட்டரசு அமைத்துக் கொள்ளும் நிலையை உண்டு பண்ணுதல் வேண்டும். அவ்வித நிலை உண்டானால், ஆங்கிலேய ஆட்சியின் பாதுகாவலாய் விளங்கி இப்போது ஆரிய ஆட்சியின் பாதுகாவல் பாசறையாய் விளங்கும் சமஸ்தானங்கள் கலைக்கப்பட்டு விடும். அய்தராபாதும், திருவாங்கூர் கொச்சியும், மைசூரும் மறைய வேண்டியனவே. ஆனால் தமக்குத்துணையாயுள்ள முடியிழந்த மன்னர்களை முற்றும் துறந்து விடுமா வடவர் ஆட்சி. துறக்க மனம் வராது. மக்கள் கிளர்ச்சி வலுப் பெற்றால், முடியிழந்த மன்னர் படி (காடு) துறக்க வேண்டியதுதான்.

ஆகவே மொழிவழி நாடுகள் அமைய முன்னின்று உழைப்போம். ஆனால் அந்நாடுகள் ஆரிய நாட்டாட்சியின் அடிமை மாகாணங்களாய் இருத்தல்கூடாது.

3-ம் பக்கம் பார்க்க

# தமிழில்பேசினால் தண்டனையாம்

★—தாமரைச் செல்வி—★

தாய் மொழியைத் தெய்வமாகவும், தமிழ் நாட்டை "வையகத் துறக்க" மாகவும் கருதிய தன்மானமானது அன்று தமிழன் உருவிலே தலை நிமிர்ந்து உலவி வந்தது. வீரத்தையும், மானத்தையும் இருவிழிக்கிணையாய் எண்ணிய பண்டைத் தமிழன் ஒரு மொழி வைத்து உலகாண்டான்! உயர்ந்த நிலையடைந்தான்! தன் நாட்டுப்பற்றையும், மொழிப் பற்றையும், தன்மான உணர்ச்சியையும் இறவாப் புகழ் மணங்கமழும் இலக்கிய ஏடுகளாகச் சமைத்து வைத்துப் போனான். எதற்காக? வருங்கால மக்களும் வாழையடி வாழையாக வளர்ந்து வந்த அந்தப் புகழை மேலும் வளர்க்க முயல வேண்டும் என்பதற்காக.

ஆனால் அவன் கனவு கனவாகவே முடிந்துவிட்டது. நாடு விடுதலையடைந்து விட்டது என்கிறோம்; நாட்டில் மறுமலர்ச்சி பிறந்து விட்டது என்கிறோம்; எந்த வகையில்? முன்னேறும் நாட்டுக்கு முட்டுக்கட்டைபோடும் முயற்சியில்தான்! தரணியெங்கும் தமிழினைப் போல் உயர்ந்த மொழி கண்டதில்லை என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. ஆனால், "தமிழரைப் போல் மொழிக் கொலையில் தலை சிறந்தோர் எவருளரே?" என்ற பெருமைதான் இன்று நமக்குரியதாக விருக்கின்றது.

இன்று அரசியலார் இயற்றாத ஆணவச் சட்டங்கள், அரிவையர் கல்லூரிகள் சிலவற்றில் அன்றாடம் முளைத்தெழுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் அழகுத் தமிழ் மொழியை நீக்கி, ஆங்கில மொழியே பேசுதல் வேண்டும் என்பது. ஆம். கூண்டில் வாழும் கிளிகளுக்குச் சொல்லிக் கொடுப்பது போல் கல்லூரியில் வதியும் கன்னியருக்கும், அங்கே, "ஆங்கிலமே பேசு, ஆங்கிலமே பேசு" என்று தான் சொல்லிக் கொடுக்கப்படுகின்றது. அதனை மீறித் தமிழிற் பேசினால், ஒரு தமிழ்ச் சொல்லுக்கு, நான்கு அணா "அபராதம்" விதிக்கப் படுகின்றது! இந்தக் கட்டளைக்குக் கல்லூரிப்பெண்களும் கட்டுப்பட்டுதானிருக்கின்றனர். ஒரு கல்லூரியில், மொழி, மதம், சாதி இவற்றால் வேறுபடுபவர் எத்தனையோ பேர் இருக்கின்றனர். பொது அடிப்படையில் ஆங்கிலம் பேசப்பட்டால் போதாதா? அறிவியல் நூல்களைக் கற்பதற்கு ஆங்கிலம் ஒரு கருவியே. அன்னை மொழிக்கில்லாத தலைமை அதற்கு எதற்கு? ஆங்கிலமே முதன் மொழியாக விருக்கும் ஆங்கில நாட்டுக் கல்லூரி ஒன்றில், பிறநாட்டு மொழியான பிரஞ்சு மொழியிலோ, செர்மன் மொழியிலோ தான் பேச வேண்டுமென்று கட்டாயப் படுத்தினால், அதனை அந்நாட்டவர் ஏற்றுக்கொள்வாரா?

மேனாட்டில் ஒரு காலத்தில், பிரஞ்சு மொழியில் உரையாடுவது நாகரிகத்தின் அடையாளமாக இருந்தது. அது மெல்லி நல்லாராம் பெண்டிற்கே உரிய மொழி என்றனர். அதன் இனிமை கருதி பெண்டிர் அதனைப் பயின்று வந்தனர். பண்பாட்டால் இனிமை வாய்ந்த தமிழ் மொழியும், பெண்களுக்கேற்ற அழகு மொழி என்றார் ஒரு மேனாட்டறிஞர். ஆனால் அந்த இனிய மொழி நல்லிசைப் புலமை மெல்லியலார் நாவில் பயிலத் தடை விதிக்கப் படுகின்றது. "பால் வாய்ப் பசுந்தமிழ்" பாவையர் நாவில் பயிலுதல் கூடாதாமே. அன்பு மொழியால் இன்பத்தாலாட்டும் தாய்மைக்கே உரியவரான பெண்களை இவ்வாறு தமிழ் பேசக்கூடாது எனக் கண்டித்தல் விந்தையினும் விந்தையே! கொடுமையினும் கொடுமையே! கலை பயிலுங்கால் கவினுறப் பேசப்படாத கன்னித் தமிழைத் தம் காதற் குழந்தைகளுடன் எவ்வாறு உரையாடுவர்? தாய் மகிழ்ந்து குலவாத தமிழைச் சிறுவர் எவ்வாறுதான் கற்பர்? தாய் மொழியாம் தமிழ் நாளடைவில், இந்நானிலத்தை விட்டே மறைந்து விடுமன்றோ?

ஒரு நாடு தனக்குரிய மொழியை ஆக்கமுறையிற் பாதுகாத்தாலன்றித் தான் சிறந்த நிலை எய்துதல் அரிதாம். மொழி வளர்ச்சி கொண்டே, அது வழங்கும் நாட்டின் நலத்தை யுணரலாம்.

(முன் பக்கத்தொடர்ச்சி)

எந்த நாடு தன் மொழிச்சுவையை உணர்தலிற் பின்னடைகின்றதோ, அது மற்ற எல்லா வளங்களாலும் பிற்பட்டதாகும். இது உலகங்கண்ட உண்மை. ஆதலின், கல்லூரித்தலைவிகள் இனியேனும் இதனை உணர்ந்து, தாய்மொழி பேசப்படுதலுக்குத் தடையுத்தரவு பிறப்பிக்காமலிருக்கட்டும். தாய்மொழிப் பற்று குன்றியிருக்கும் இம்மாணவியர்க்கும் அப்பற்றினை ஊட்டித் தமிழ்த்தொண்டு செய்யட்டும். தமிழ் பேசுபவரைக் கண்டித்துத் தமக்குமட்டுமின்றி, தமிழ்மொழிக்கும், பரம்பரைக்கும் கூட ஏன் இவர்கள் தலைக்குனிவைத்தேடிக்கொள்ளவேண்டும்? தனிப்பட்டமுறையில் வேண்டுமானால் தமிழுக்குத் தொண்டு செய்ய இவர்களால் இயலாமலிருக்கலாம் அதற்காகமொழிவளர்ச்சியை ஏன் தடுக்க வேண்டும்? இனியாவது இதனைத் தடுத்துக் கல்லூரிகளில் இத்தகைய சட்டங்களை உருவாக்காமல் இருக்கட்டும். இதுவே இவர்கள் தன் தமிழ்மொழிக்குச் செய்யும் பெரிய தொண்டல்லவா?


## பெரியார் பயிற்சிக் கல்லூரி

**கிளை—திருச்சிராப்பள்ளி.**

திருச்சியில் தொடங்க விருக்கும் பெரியார் பயிற்சிக் கல்லூரியில் **S.S.L.C. Intermediate, B. A.** முதலிய வகுப்புக்களின் எல்லா பாகங்களுக்கும் வித்துவான் முன்னிலை வகுப்பு,முடிவு நிலை வகுப்புப் பகுதிகட்கும் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு பயிற்சியளிக்கப்படும். **15—11—52** முதல் வகுப்புகள் தொடங்கப்பெறும். இடமும் பிறவும் பின்னர் அறிவிக்கப்படும். சேரவிரும்புவோர்,

பெரியார் பயிற்சிக் கல்லூரிச் செயலாளர்
C/o தி. பொ. வேதாசலம், வழக்கறிஞர்
தென்னூர், திருச்சி.

என்ற முகவரிக்கோ எனக்கோ விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**சி. இலக்குவனார்,**
**கரந்தை, தஞ்சாவூர்.**



# 'Dravidian Federation'

**The English weekly, will come out on 1—1—1953.**

**Annual Subscription Rs. 5.**


## விற்பனையாளர்கட்கு

திராவிடக்கூட்டரசை ஆங்காங்கு விற்பனை செய்யப் பொறுப்பேற்றிருக்கும் அன்பர்களே! இதழ் செம்மையாகத் தவறாது நடைபெறுவதற்கு உங்கள் உதவியும் இன்றியமையாததே. நான்கு வெளியீடுகட்குரிய பற்றுச் சீட்டு (Bill) விடுக்கப்பட்டு ஒரு வாரமாகின்றது. விற்பனைத் தொகையைக் காலந் தாழ்த்தாது உடனே அனுப்பி வையுங்கள். சுவரொட்டி விளம்பரங்கள் வேண்டுமென்று எழுதியுள்ளீர்கள். குறைந்த பக்கங்கள் கொண்ட இதழானமையின் சுவரொட்டி விளம்பரங்களில் பொருட்செலவு செய்ய விரும்பவில்லை. விற்பனைக் கடைகளில் தொங்கிக் கொண்டிருக்கும் இதழைப் பார்த்தே அன்பர்கள் வாங்குவார்கள். ஒரு இதழ் பெற்ற அன்பர் மற்றவர்க்குச் சொல்ல அவர் பிறிதொருவருக்குச் சொல்ல அவர் வேறொருவர்க்குச் சொல்ல இவ்விதமே திராவிடக்கூட்டரசை விளம்பரப் படுத்த வேண்டுகிறேன்.

**"BLITZ" "CURRENT"** போன்ற ஆங்கில இதழ்களைப்போல் நல்ல தமிழில் திராவிடக்கூட்டரசை வெளியிட வேண்டுமென்று விரும்பி முயல்கின்றேன். எனது விருப்பம் நிறைவேற ஆவன புரிவீர்களாக.

## ஆங்கில வார இதழ்

திராவிடர்களின் உரிமைக்குரலை எத்திக்கெட்டும் கேட்குமாறு செய்ய, பிரிந்துள்ள திராவிட இன மக்களை ஒன்று படுத்த உலக அரங்கில் திராவிடர் நிலையை உயர்த்த ஆங்கில வார இதழ் இன்றியமையாததொன்று. ஆதலின் அன்பர்களே ஒல்லும் வகையால் உதவுங்கள். உறுப்பினர்களாகச் சேருங்கள். நன்கொடை அளியுங்கள். தனி இதழ் 0-2-0. ஆண்டுக் கட்டணம் ரூ. 6-0-0 1-1-1953-ல் தவறாது வெளிவரும்.

இலக்கியம் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்று
ஆசிரியர் சி.இலக்குவனாரால் வெளியிடப்பெற்றது.